முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## இறுதிப் பரீட்சை – 2011 ஜுலை

## (60) உயர் நிதிக் கணக்கியல்

Advanced Financial Accounting

17-07-2011
காலை
[9.00 – 12.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 10
வினாக்களின் எண்ணிக்கை : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

  (1) *எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக*
  (2) *சகல செயல்முறைகளும் கணிப்புக்களையும் முன்வைக்க. உங்களால் மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள் ஏதுமிருப்பின் தெளிவாகக் குறிப்பிடுக.*
  (3) ***விடைகள் யாவும்** உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே ஒரு மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.*
  (4) *கணிப்பான்கள் பயன்படுத்துதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (5) *மொத்தம் 100 புள்ளிகள்.*

---

**01.** (A) பரிப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியான **பரகன் PLC கம்பனியின்** 2011 மார்ச் 31 ஆம் திகதியில் பரீட்சைமீதி கீழே தரப்பட்டுள்ளது:

**2011 மார்ச் 31 ஆம் திகதியில் பரீட்சை மீதி**

| | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| **குறிப்பிடு மூலதனம்** | | |
| சாதாரண பங்குகள் (1,000,000 பங்குகள்) | | 22,000 |
| முன்னுரிமைப் பங்குகள் (512,500 பங்குகள்) | | 8,200 |
| 15% தனிச்சங்கள் | | 3,000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 2,500 |
| பொது ஒதுக்கம் | | 3,400 |
| கைக்கொள் வருவாய் 2010 ஏப்ரல் 1 ஆம் திகதி | | 4,800 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்** | | |
| காணி | 17,000 | |
| கட்டடம் | 10,080 | |
| மோட்டார் வாகனங்கள் | 3,500 | |
| அலுவலக உபகரணங்கள் | 3,200 | |
| தளபாடமும் இணைப்புக்களும் | 1,200 | |
| **தேய்மான ஏற்பாடு – 2010 ஏப்ரல் 1 ஆம் திகதி** | | |
| கட்டடம் | | 5,040 |
| மோட்டார் வாகனங்கள் | | 1,400 |
| அலுவலக உபகரணங்கள் | | 1,760 |
| தளபாடமும் இணைப்புக்களும் | | 540 |
| முதலீடுகள் - கிரயத்தில் | 12,000 | |
| தொக்குகள் | 10,600 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 8,700 | 7,469 |
| அட்டுறு செலவுகள் | | 1,245 |
| வங்கிக் கடன் | | 6,500 |
| செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்கிலாபம் | 1,000 | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 3,890 | |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2010 ஏப்ரல் 1 இல் | | 196 |
| விற்பனைக் கிரயம் / விற்பனைகள் | 62,400 | 96,000 |
| முதலீட்டு வருமானம் | | 960 |
| நிருவாகச் செலவுகள் | 12,760 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 10,760 | |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 6,000 | |
| நிதிக் கட்டணங்கள் | 1,300 | |
| செலுத்தப்பட்ட வரி | 620 | |
| | **165,010** | **165,010** |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

(1) 2011 மார்ச் 15 ஆம் திகதியில் வைத்திருக்கப்படும் ஒவ்வொரு 8 பங்குகளுக்கும் ஒரு பங்கு என்ற விகிதத்தில், பங்கொன்று ரூ.15 விலையில் உரிமைப் பங்கு வழங்கல் சகல சாதாரண பங்குதாரர்களுக்கும் கொடைமுனைவு செய்யப்பட்டது. எனினும் இந்த ஊடுசெயல் பேரேட்டில் உரிய முறையில் பதிவு செய்யப்படவில்லை. பெறப்பட்ட பணம் வங்கிக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டு வியாபார வருமதிக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்ட பதிவு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. சகல பங்குதாரர்களும் தமது பங்குரிமையினைப் பிரயோகித்துள்ளதாகக் கொள்க.

(2) பெயரளவுப் பெறுமதி ரூ.2,000,000 ஆன 15% தனிச்சங்கள் 12% வட்டத்தில் 2010 டிசம்பர் 31 ஆம் திகதி மீட்கப்பட்டது. தேவையான நிதியினைப் பெறும் நோக்கில் கம்பனி அதன் முதலீட்டின் ஒரு பகுதியினை கிரயத்தில் விற்பனை செய்தது. முதலீடு களின் விற்பனையிலிருந்து பெற்ற பணம் பேரேட்டிலும் வங்கிக் கணக்கிலும் சரியாகப் பதிவு செய்யப்பட்டது. எனினும் தனிச்சங்களை மீட்பதற்காக செலுத்தப்பட்ட பணம் வியாபார சென்மதிக் கணக்கிலும் வங்கிக் கணக்கிலும் பதிவு செய்யப்பட்டது.

(3) ரூ.1,200,000 கிரயமான மோட்டார் வாகனமொன்று விபத்தொன்றில் சிக்கியமை காரணமாக 2011 பெப்ரவரி 28 ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டது. இந்த வாகனத்தின் விற்பனை செய்யப்பட்ட விலை ரூ.250,000 உம் 2010 ஏப்ரல் 1 ஆம் திகதியில் அந்த வாகனத்தின் திரள் தேய்மானம் ரூ.240,000 உம் ஆகும். இந்த விபத்து தொடர்பில் காப்புறுதிக் கம்பனி ரூ.400,000 இனைச் செலுத்த ஒப்புக் கொண்டது. காப்புறுதிப் பணம் இன்னும் கிடைக்கவில்லை. விற்பனையினால் கிடைக்கப்பெற்ற பணம் வங்கிக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டு மோட்டார் வாகனக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டதனைத் தவிர இது தொடர்பில் வேறெந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப் படவில்லை.

(4) கம்பனியானது 2011 ஜனவரி 31 ஆம் திகதியில் மொத்தப் பெறுமதி ரூ.375,000 க்கு மூன்று (3) புதிய கணினிகளைக் கொள்வனவு செய்தது.

(5) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீது தேய்மானம் நேர்கோட்டு முறையில் கீழ்வரும் விகிதங்களில் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்:

| | |
|---|---|
| கட்டடம் | - ஆண்டிற்கு 5% |
| மோட்டார் வாகனம் | - ஆண்டிற்கு 20% |
| அலுவலக உபகரணம் | - ஆண்டிற்கு 20% |
| தளபாடம் மற்றும் இணைப்புக்கள் | - ஆண்டிற்கு 15% |

(6) வியாபார வருமதியாளர் ஒருவரிடமிருந்து ரூ.23,000 க்குப் பெறப்பட்ட காசோலை 2011 மார்ச் மாத இறுதியில் வங்கியினால் திருப்பி அனுப்பப்பட்டது. எனினும் பேரேட்டில் இது தொடர்பில் செம்மையாக்கம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை

(7) வியாபார வருமதியாளர் ஒருவரிடமிருந்து வருமதியாக இருந்த ரூ.65,000 ஆண்டின் போது அறவிடமுடியாததாகத் தீர்மானிக்கப்பட்டது. வியாபார வருமதியாளர் கணக்கின் ஆண்டிறுதி மீதியில் 3% ஐயறவுக் கடனுக்காக ஏற்பாடு செய்ய கம்பனி தீர்மானித்தது.

(8) பரீட்சை மீதி பிரித்தறியப்பட்டபோது கீழ்வரும் செலவுகள் கணக்கிற் கொள்ளப்பட்டிருக்க வில்லை.

| | | ரூ. |
|---|---|---|
| கணக்காய்வுக் கட்டணம் | - | 150,000 |
| தொலைபேசி, நீர் மற்றும் மின் கட்டணம் | - | 12,000 |
| விற்பனை ஊக்குவிப்புப் படி | - | 22,000 |

(9) 2011 மார்ச் 31 ஆம் திகதி கம்பனியானது கீழ்வரும் முற்கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தது.:

| | ரூ. |
|---|---|
| ஊழியர் வைத்தியக் காப்புறுதி | 800,000 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு | 18,000 |

(10) வங்கிக் கடனின் $\frac{1}{5}$ பங்கு நிதியாண்டு 2011/12 இன்போது செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும்.

(11) ஆண்டின் மொத்த முதலீட்டு வருமானம் - ரூ.1,100,000.

(12) முதலீடுகள் எல்லாம் நீண்ட காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டவை.

(13) வரிமதிப்பாண்டு 2010/11 க்கான வருமான வரி ரூ.752,000.

(14) 2011 மே 01 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபை கீழ்வருவன வற்றிற்குப் விதந்துரைத்தது.

- ரூ.1,000,000 இனை பொது ஒதுக்கத்திற்கு மாற்றுவதற்கு
- 2011 மார்ச் 31 ஆம் திகதியில் இருந்த சாதாரண பங்குகள் மீது பங்கொன்றுக்கு ரூ.2 சாதாரண பங்கிலாபத்தினைச் செலுத்துவதற்கு
- 2011 மார்ச் 31 ஆம் திகதியில் இருந்த முன்னுரிமைப் பங்குகள் மீது பங்கொன்றிற்கு ரூ.1.20 முன்னுரிமைப் பங்கிலாபம் செலுத்துவதற்கு

**பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவில் பரகன் PLC கம்பனிக்காக கீழ்வருவனவற்றினைத் தயாரிக்குக.**

(a) 2011 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று (10 புள்ளிகள்)

(b) 2011 மார்ச் 31 ஆம் திகதியில் ஐந்தொகை (09 புள்ளிகள்)

(c) ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான குறிப்பு (05 புள்ளிகள்)

(d) 2011 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (03 புள்ளிகள்)

(B) *"கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் (SLAS 10)"* எனும் நியமத்தில் தரப்பட்டுள்ள பொருள் வரையறைகளுக்கு அமைவாக கீழ்வரும் பதங்களை விபரிக்குக.

(a) கணக்கீட்டுக் கொள்கைகள்

(b) பொருண்மை (Material)

(c) முன்னையகால வழுக்கள் (prior period errors) (03 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

**02.** (A) பங்காளரின் ஆயுட்காலக் காப்புறுதியினை பங்குடைமை வியாபாரத்தில் கணக்கீடு செய்வதற்கு கிடைக்கப்பெறும் மூன்று (3) முறைகளை நிரற்படுத்துக. (03 புள்ளிகள்)

(B) **அனிலும் சுனிலும்** பங்குடைமை ஒன்றின் பங்காளர்கள் ஆவர். கீழே தரப்பட்டுள்ள பரீட்சை மீதி பங்குடைமைக் கணக்கேடுகளிலிருந்து 2011 மார்ச் 31 ஆம் திகதியில் பிரித்தறியப்பட்டவையாகும்.

**அனில் மற்றும் சுனில் பங்குடைமை**
**2011 மார்ச் 31 ஆம் திகதியில் பரீட்சை மீதி**

| | வரவு (Rs.'000) | செலவு (Rs.'000) |
|---|---|---|
| அட்டுறு செலவுகள் | | 140 |
| நடைமுறைக் கணக்கு - **அனில்** | | 400 |
| - **சுனில்** | | 350 |
| மூலதனக் கணக்கு - **அனில்** | | 1,000 |
| - **சுனில்** | | 850 |
| காணியும் கட்டடமும் - கிரயத்தில் | 1,000 | |
| பொறியும் இயந்திரமும் - கிரயத்தில் | 900 | |
| மோட்டார் வாகனம் - கிரயத்தில் | 850 | |
| அலுவலக உபகரணம் - கிரயத்தில் | 450 | |
| **திரள் தேய்மானம்** காணியும் கட்டடமும் | | 100 |
| பொறியும் இயந்திரமும் | | 180 |
| மோட்டார் வாகனம் | | 170 |
| அலுவலக உபகரணம் | | 90 |
| நிகர இலாபம் (2011 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு) | | 800 |
| முற்கொடுப்பனவுகள் | 240 | |
| அனிலுக்கு செலுத்தப்பட்ட சம்பளம் | 240 | |
| தொக்குகள் | 360 | |
| காசுக் கையிருப்பு | 480 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 300 |
| வியாபாரச் சென்மதிகள் | | 260 |
| வியாபார வருமதிகள் | 120 | |
| | **4,640** | **4,640** |

கீழே தரப்பட்ட மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

(1) பங்குடைமை ஒப்பந்தம் கீழ்வருமாறு:

(i) பங்குடைமையின் இலாப, நட்டங்கள் பங்காளரிடையே சமமாகப் பகிரப்படும்

(ii) அனில் மாதாந்தம் ரூ.20,000 சம்பளத்திற்கு உரித்துடையவராவார்

(iii) ஒவ்வொரு ஆண்டினதும் ஆரம்பத்திலிருந்த மூலதன மீதியில் 10% வட்டி செலுத்தப்படும்

(2) பங்காளர்கள் பங்குடைமையினை 2011 ஏப்ரல் 1 ஆம் திகதியில் பரிப்பு வரையறுக் கப்பட்ட கம்பனியொன்றாக மாற்றத் தீர்மானித்தனர். இதற்காக வ/வு **A அன்ட் S கம்பனி** என்ற பெயரில் கம்பனியொன்று கூட்டிணைக்கப்பட்டது.

(3) **அனில்** ஒரே வாகனமான மோட்டார் காரினை இணங்கப்பட்ட பெறுமதியான ரூ.500,000 க்கு எடுத்துக் கொண்டார்

(4) பங்குடைமையின் ஏனைய சகல சொத்துக்களும் பரிப்புக்களும் வ/வு **A அன்ட் S கம்பனி** இனால் ரூ.2.3 மில்லியன் கொள்வனவுப் பதிலிறுக்கிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் இது ஒவ்வொன்றும் ரூ.20 விலையான 100,000 சாதாரண பங்குகள் வழங்கப்பட்டும் எஞ்சிய தொகை பணமாகச் செலுத்தப்பட்டும் 2011 ஏப்ரல் 1 ஆம் திகதி தீர்க்கப்பட்டது. வ/வு **A அன்ட் S கம்பனி** பங்குடைமையிலிருந்து பெற்றுக் கொண்ட வங்கிக் கணக்கினை காசுக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள உபயோகித்தது.

(5) இந்தப் பரிமாற்றித்தின்போது பங்காளர் கணக்குகளில் பற்றாக்குறை மீதி ஏதும் ஏற்படுமானால் அந்தத் தொகையினை பணம் செலுத்தி ஈடுசெய்ய பங்காளர்கள் இணங்கிக் கொண்டனர்.

**மேலே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் கீழ்வருவனவற்றினைத் தயாரிக்குக.**

(a) 2011 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்வுக் கணக்கு

(b) பங்காளர் கணக்குகள் (நடைமுறைக் கணக்கின் இறுதி மீதி மூலதனக் கணக்குகளுக்கு மாற்றப்படும்)

(c) தேறுகைக் கணக்கு

(d) 2011 ஏப்ரல் 1 ஆம் திகதியில் வ/வு **A அன்ட் S கம்பனியின்** ஐந்தொகை (12 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**03.** (A) வ/வு ஹிருணி மற்றும் வ/வு வருணி ஆகிய கம்பனிகளின் 2011 மார்ச் 31 ஆம் திகதியில் ஐந்தொகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**2011 மார்ச் 31 இல் ஐந்தொகைகள்** *(Rs.'000)*

| | **வ/வு ஹிருணி** | **வ/வு வருணி** |
|---|---|---|
| **சொத்துக்கள்**<br>**நடைமுறையல்லாச் சொத்துக்கள்**<br>(ஏட்டுப் பெறுமதியில்) | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 56,000 | 46,500 |
| **முதலீடுகள்**<br>வ/வு வருணியின் சாதாரண பங்குகளில் | 33,000 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| தொக்குகள் | 6,800 | 4,300 |
| வியாபார வருமதிகள் | 7,400 | 6,500 |
| வருமதியாகவுள்ள பரிமாற்று உண்டியல்கள் | 1,120 | 950 |
| காசும் வங்கி மீதியும் | 2,700 | 752 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **107,020** | **59,002** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | |
| குறிப்பிடு மூலதனம் | - | - |
| சாதாரண பங்குகள் | 45,000 | 36,000 |
| முன்னுரிமைப் பங்குகள் | 13,000 | 10,000 |
| **ஒதுக்கங்கள்** | | |
| பொது ஒதுக்கம் | 24,500 | 4,310 |
| கைக்கொள் இலாபம் | 5,560 | 2,950 |
| **பரிப்புக்கள்**<br>**நடைமுறையல்லாப் பரிப்புக்கள்** | | |
| வங்கிக் கடன் | 6,000 | - |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | |
| வியாபார சென்மதிகள் | 8,250 | 3,500 |
| சென்மதியான பரிமாற்று உண்டியல்கள் | 2,450 | 1,500 |
| அட்டுறுச் செலவுகள் | 1,385 | 477 |
| சென்மதியான வருமான வரி | 875 | 265 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **107,020** | **59,002** |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

(1) வ/வு ஹிருணி கம்பனி 2008 ஏப்ரல் 1 ஆம் திகதியில் வ/வு வருணி கம்பனியின் சாதாரண பங்குகளில் 80% இனைக் கொள்வனவு செய்தது.

(2) கொள்வனவுத் திகதியில் வ/வு வருணியின் ஏடுகளில் கீழ்வரும் மீதிகள் காணப்பட்டன.

| | ரூ. |
|---|---|
| பொது ஒதுக்கம் | 2,560,000 |
| கைக்கொள் இலாபம் | 1,800,000 |

(3) **வ/வு ஹிருணி கம்பனியானது வ/வு வருணி கம்பனிக்கு பொருட்களை கிரயத்தில்** 30% இலாபம் வைத்த விற்பனை செய்கிறது. 2011 மார்ச் 31 ஆம் திகதியில் வ/வு வருணி கம்பனியின் இறுதித் தொக்குகள் வ/வு ஹிருணி கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூ.195,000 பெறுமதியான தொக்குகளை உள்ளடக்கியிருந்தது.

(4) வ/வு ஹிருணி கம்பனியின் வருமதியாகவுள்ள பரிமாற்று உண்டியல்கள் வ/வு வருணி கம்பனியிடமிருந்து வருமதியாக இருந்த ரூ.850,000 பெறுமதியான வருமதி உண்டியல்களை உள்ளடக்கியிருந்தது.

(5) 2010 ஏப்ரல் 1 ஆம் திகதியில் வ/வு ஹிருணி கம்பனி ரூ.2.55 மில்லியன் கிரயமான காணித்துண்டொன்றினை வ/வு வருணி கம்பனிக்கு ரூ.2.7 மில்லியனுக்கு விற்பனை செய்தது.

மேலே தரப்பட்டுள்ள தகவல்களை உபயோகித்த, 2011 மார்ச் 31 ஆம் திகதியில் ஒன்றித்த ஐந்தொகையினைத் தயாரிக்குக. (13 புள்ளிகள்)

(B) "*ஒன்றித்த மற்றும் வேறான நிதிக்கூற்றுக்கள் (SLAS 26)*" எனும் நியமத்தில் தரப்பட்டுள்ள பொருள் வரையறைகளுக்கு அமைவாக கீழே தரப்பட்டுள்ள பதங்களை விபரிக்குக.

(a) கிரய முறை (cost method)

(b) வேறான நிதிக் கூற்றுக்கள் (Separate Financial Statements) (04 புள்ளிகள்)

(மொத்தம் 17 புள்ளிகள்)

**04.** (a) நிதிப் பொதுக் கணக்குகள் குழுவின் (COPA) வகிபாத்திரம் மற்றும் அதிகாரங்களை நிரற்படுத்துக.

(04 புள்ளிகள்)

(b) நிதிப் பிரமாணங்களின் (financial regulations) நோக்கத்தினைச் சுருக்கமாக விபரித்து அவ்வாறான பிரமாணங்கள் பிரயோகிக்கப்படும் விடயங்களுக்கு உதாரணங்கள் தருக.

(03 புள்ளிகள்)

(c) வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு மற்றும் வருமான செலவின மதிப்பீடுகளின் தயாரிப்பு செயன்முறைகளைச் சுருக்கமாக விபரிக்குக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**05.** **அஹிகபர PLC கம்பனியின்** 2011 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்றும் 2010 மார்ச் 31 மற்றும் 2011 மார்ச் 31 ஆம் திகதிகளில் ஐந்தொகைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**அகிஹபர PLC**
**2011 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக்கூற்று**

| | **ரூ.'000** | **ரூ.'000** |
|---|---|---|
| விற்பனை | | 107,250 |
| விற்பனைக் கிரயம் | | (77,220) |
| மொத்த இலாபம் | | 30,030 |
| வேறு வருமானம் | | 1,870 |
| | | 31,900 |
| **கழி: செலவுகள்** | | |
| விநியோகச் செலவுகள் | 5,362 | |
| நிருவாகச் செலவுகள் | 12,500 | |
| ஏனைய செலவுகள் | 2,145 | |
| நிதிக்கிரயம் | 4,290 | 24,297 |
| வரிக்கு முன் நிகர இலாபம் | | 7,603 |
| வரி | | 2,433 |
| **வரிக்கப் பின் நிகர இலாபம்** | | **5,170** |

**அகிஹபர PLC**
**மார்ச் 31 ஆம் திகதியில் ஐந்தொகை**

| | **2011 மார்ச் 31 Rs.'000** | **2010 மார்ச் 31 Rs.'000** |
|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | |
| (முன் கொணரற் தொகைகளில்) | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 47,000 | 35,970 |
| முதலீடுகள் | 21,800 | 21,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| தொக்குகள் | 6,500 | 2,100 |
| வியாபார வருமதிகள் | 2,900 | 1,250 |
| காசும் காசுச் சன்மானங்களும் | 580 | 1,200 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **78,780** | **61,520** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | |
| **உரிமையாண்மை** | | |
| குறிப்பிடு மூலதனம் : | | |
| சாதாரண பங்குகள் (2,000,000 பங்குகள்) | 28,000 | 28,000 |
| **ஒதுக்கங்கள்** | | |
| பொது ஒதுக்கம் | 4,650 | 4,650 |
| இலாப நட்டக் கணக்கு | 11,420 | 6,250 |
| **பரிப்புக்கள்** | | |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்** | | |
| வங்கிக் கடன் | 28,500 | 14,500 |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | |
| வியாபாரச் சென்மதிகள் | 4,600 | 6,520 |
| அட்டுறு செலவுகள் | 715 | 1,250 |
| சென்மதியாகவுள்ள வருமான வரி | 895 | 350 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **78,780** | **61,520** |

- சாதாரண பங்குகளின் சந்தைப் பெறுமதி 2011 மார்ச் 31 இல் ரூ.15.50 உம் 2010 மார்ச் 31 இல் ரூ.16.25 உம் ஆகும்.
- விற்பனையின் 85% உம் கொள்வனவின் 65% உம் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றன.
- 2010 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வரிக்குப் பிந்திய இலாபம் ரூ.6,125,000 ஆகும்.
- மொத்த மற்றும் நிகர இலாப விகிதங்கள் முறையே 30% உம் 6% உம் ஆகும்.

(a) மேலே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 2011 மார்ச் 31 மற்றும் 2010 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டிற்காக அகிஹபர PLC கம்பனியின் கீழ்வரும் விகிதங்களைக் கணிக்குக.

(i) மொத்த இலாப விகிதம் (2011 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கு)

(ii) நிகர இலாப விகிதம் (2011 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கு)

(iii) நடப்பு விகிதம் (Current Ratio)

(iv) விரைவுச் சொத்து விகிதம் (Quick Asset Ratio)

(v) நெம்பு விகிதம் (Gearing Ratio)

(vi) பங்கொன்றிற்கான வருவாய் (EPS)

(vii) விலை - வருவாய் விகிதம் (P/E Ratio)

(viii) தொழிற்படுத்தப்படு மூலதனம் மீதான வருவாய் (ROCE) (08 புள்ளிகள்)

(b) மேலே கணிக்கப்பட்ட விகிதங்களின் அடிப்படையில் கம்பனியின் இலாபகரத் தன்மை மற்றும் நிதி நிலை பற்றி முகாமைக்கு அறிக்கை ஒன்றைத் தயாரிக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 14 புள்ளிகள்)

**06.** (A) வ/வு லங்கா கம்பனியின் 2011 மார்ச் 31 மற்றும் 2010 மார்ச் 31 ஆம் திகதிகளில் ஐந்தொகைகளும் 2011 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளன.

**வ/வு லங்கா கம்பனி**

**மார்ச் 31 ஆம் திகதியில் ஐந்தொகை**

| | 31 மார்ச் 2011<br>Rs.'000 | 31 மார்ச் 2010<br>Rs.'000 |
|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>**<br>**நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 61,290 | 44,060 |
| கழி: திரள் தேய்மானம் | 12,640 | 8,810 |
| | **48,650** | **35,250** |
| முதலீடுகள் | 3,500 | 3,500 |
| | **52,150** | **38,750** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| தொக்குகள் | 16,500 | 16,500 |
| வியாபாரம் மற்றும் பிற வருமதிகள் | 30,000 | 25,600 |
| காசும் காசுச் சமானங்களும் | 15,000 | 9,710 |
| | **61,500** | **51,810** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **113,650** | **90,560** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | |
| **உரிமையாண்மை** | | |
| குறிப்பிடு மூலதனம் | 15,000 | 15,000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 3,000 | - |
| கைக்கொள் இலாபம் | 15,310 | 13,560 |
| | **33,310** | **28,560** |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | |
| வட்டி கொண்ட கடன்கள் | 35,600 | 18,600 |
| ஓய்வுப் பயன் பரிப்பு | 17,000 | 15,750 |
| | **52,600** | **34,350** |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | |
| வியாபார மற்றும் பிற சென்மதிகள் | 24,740 | 25,300 |
| வருமானவரிப் பரிப்பு | 1,500 | 1,350 |
| சென்மதியாகவுள்ள பங்கிலாபம் | 1,500 | 1,000 |
| | **27,740** | **27,650** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **113,650** | **90,560** |

**2011 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**வ/வு லங்கா கம்பனியின் தொகுக்கப்பட்ட வருமானக் கூற்று**

| | **ரூ.'000** |
|---|---|
| மொத்த இலாபம் | 14,500 |
| கழி:செலவுகள் | |
| நிருவாகச் செலவுகள் | (1,300) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | (7,900) |
| வட்டி | (350) |
| | 4,950 |
| கழி: வருமான வரி | (1,700) |
| **வரிக்குப் பின் இலாபம்** | **3,250** |
| பங்கிலாபம் | 1,500 |
| **கைக்கொள் வருமானம்** | **1,750** |

கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

(1) கம்பனியின் மொத்த இலாப விகிதம் 40% ஆகும். காசு விற்பனைக்கும் கடன் விற்பனைக்கும் இடையேயான விகிதம் 1 : 1 ஆகும்.

(2) பிற தொழிற்பாட்டுச் செலவுகள் ஓய்வுப் பயன்களுக்கான ஏற்பாடு ரூ.1,250,000 இனை உட்படுத்துவதுடன் அது தவிர்ந்த ஏனையவை காசு அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டவையாகும்.

(3) கம்பனி ஆண்டின்போது ரூ.20 மில்லியனை கடனாகப் பெற்றிருந்ததுடன் வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ள வட்டிக் கிரயம் ஆண்டின்போது வட்டியாக செலுத்தப்பட்ட தொகையாகும்.

SLAS 9 இன் நேர்முறையினை (direct method) உபயோகித்து தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான நிகர காசுப் பாய்வினைக் கணிக்குக. (08 புள்ளிகள்)

(B) கீழே தரப்பட்டுள்ள பங்கு ஊடு செயல்கள் பங்கு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ள வ/வு இன்பினிட்டி கம்பனியின் 2010/2011 ஆண்டு தொடர்புபட்டவையாகும்.

(1) 2010 ஏப்ரல் 1 ஆம் திகதி வ/வு இன்பினிட்டி கம்பனி ரூ.12 000 கிரயமான 1000 முன்னுரிமைப் பங்குகளைக் கொண்டிருந்தது.

(2) 2010 மே 30 ஆம் திகதியில் அதே கம்பனியின் 1 200 முன்னுரிமைப் பங்குகளை பங்கிலாப உரிமையுடன் (cum div) ஒவ்வொன்றும் ரூ.12.75 விலையில் கொள்வனவு செய்தது.

(3) 2010 அக்டோபர் 1 ஆம் திகதி அதே கம்பனியின் 2 500 முன்னுரிமைப் பங்குகளை பங்கிலாப உரிமை இல்லாது (ex-div) ஒவ்வொன்றும் ரூ.11.25 விலையில் கொள்வனவு செய்தது.

(4) சுகல முன்னுரிமைப் பங்குகளும் ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் 31 ஆம் திகதியில் ஆண்டுதோறும் ரூ.1.50 பங்கிலாபத்திற்கு உரித்துடையதாகும்.

2010/2011 ஆண்டிற்கு வ/வு இன்பினிட்டி கம்பனியின் முதலீட்டுக் கணக்கினையும் பங்குப் பதிவேட்டினையும் தயாரிக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் 14 புள்ளிகள்)

– o0o –